செய்தித் தாளாகப் பதிவுபெற்றது.

உ
சிவமயம்

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி ஆண்டு (1889) ஆவணி 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். பிரதி விலை: சதம் 20 தொலைபேசி: 356

புத்- அரு] பத்திராதிபர்: பிரமாதீச ஆண்டு மார்கழி ௴ உஎ-உ வெள்ளிக்கிழமை (11 - 1 - 1974) [இல: ௩அ

23 JAN 1974

# தமிழ் அழகு தவழப் பாங்கான பழம் பெருமைப் பவனி

## பாரறிய ஊர் அறியப் பண்பமைந்த வகையில் ஊர்தி உலா

## மக்கள் வெள்ளத்துடன் மழை வெள்ளமும் கலந்த அ. உ. தமிழ் மாநாட்டுக் கடல்

## மொழி உணர்ச்சி முழக்கம் எழுந்தது யாழ் நகர் எங்கணும்

காணக் கண்கள் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். கண்டதெல்லாம் காட்சியல்லக் காணுங்கள் காசினிப் புகழ் ஒங்கும் இந்தக் கலாசார ஊர்திகள் பவனியை என்று இயற்கையாய் எழுந்த அழைப்புப்போல இருந்தது. மாநாட்டு அலங்கார ஊர்தி உலா நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலடியிலிருந்து ஆரம்பமாகி வீதிகள் ஊடாக விழாக் கோலங்கொண்டு மின் ஒளி பொன் ஒளி மயமாய் விண்ணிடை விளங்க தமிழ் நடைத் தனித் தன்மையுடன் தவழ்ந்து நகர்ந்து அணி அணியாக அமைந்த அவ்வேளை மண்ணவர் மலர்மாரி வழங்கினர். விண்ணவர் பனிநீர் தெளித்து மகிழ்ந்தனர். ஆயிரம் ஆயிரமான மக்கள் கூட்டம் பல்லாயிரமாகி நூறாயிரமாய் வேறுவேறு வீதிகள்தோறும் நின்று மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். யாதினை...? தமிழ்மொழிச் சால்பினை

### சிவமயச் செல்வம்

திருவாசகவிழா திருக்கேதீச்சரத்தில நடந்தபொழுது அங்கு சொற்பெருக்காற்றிய சிவத் [illegible] அப்பாக்குட்டிக்கு 'சிவமயச்செல்வன்' என்ற பாராட்டு வரிசை விழாச் சபையினர் சார்பாக சமயச் செல்வர் சரவணமுத்துச்சுவாமி தலைமையில வழங்கப்பட்டது

## ஆராய்ச்சி மாநாட்டுக்குள் ஆராய்ச்சி

மாநாடும் மேல்நாடும் [illegible] தமிழ் ஆராய்ச்சியாளர் கணக்கத்திற்குரிய Yugova Frykholm அவர்கள் திருக்குறளில் உருககொண்டவர் போலப் பொய்யா மொழி பலவற்றைப் பொருத்தமான கருத்துக்களுடன் அந்தக் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது.

அவ்வளவில் அவர் நின்றுவிடவில்லை. 'செந்தமிழ் நாடென்பது' யாழ் மணி நாடேயென்று நன்குணர்ந்து பாரதியின் புகழ் பெற்ற பாவின் முதற்சீரை வழுவின்றி மாற்றி உரைத்து மகிழ்ந்தனர்.

"யாழ்மணி நாடென்ற
போதினிலே
தேன்வந்து பாயுது
காதினிலே" ... ....

என்றால் இதைவிட மேனாட்டவரின் நாநவித நய ஆராய்ச்சி உண்டா ......?

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

### எங்கும் எழுச்சி!

தமிழ்க் கலை உருவங்கள் தமிழ் நூல் தந்த தலைவாய புலவர்கள் அன்றோ. அன்னாரின் உருவங்கள் ஆராய்ச்சிக்குரிய அத்தியாவசிய[illegible] மிகப் பழைய அகத்திய மாமுனி, தீஞ்சுவைத் செய்வப் பனுவல்கள் தந்த திருமுறைச் செல்வர்களாம் நால்வர் திருக்கோலத்தின் சீர்பொலிவு, தெள்ளுதமிழ் வள்ளுவ நாயனார் செவ்விய

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

## திருவெம்பாவையும் திருப்பாவையும்

திருவெம்பாவையும், திருப்பாவையும் 4வது தமிழாராய்ச்சி மாநாட்டின் குழு நிலை அரங்கில் ஏற்றப்பட்ட கட்டுரையாகும். ஒப்பியல் நோக்கில் இதனைத் தீட்டியுள்ள "ஈழவேந்தன்" அவர்கள் ஏலவே இந்துசாதனம் வாசகர்களுக்கு பல தொடர் அம்சங்களை ஆக்கித்தந்திருக்கின்றார். இக்கட்டுரை ஐந்து அங்கங்களாக வெளியிடப்படும்.

ஈழவேந்தன்

திருவெம்பாவையும் திருப்பாவையும் உணர்த்தும் உட்பொருள் யாதென்பதை உணருமுன் முதலில் அதனின் வரலாற்றினை சிறிது அறிதல் நலம். பின்பு இவற்றின் மெய் விளக்கத்தை அதாவது இவற்றின் தத்துவத்தை உய்த்து உணர்தல் பயன் தருவதாக அமையும்.

**தோற்ற வரலாறு**

தமிழன் தன் நாட்டின் காலப்பருவத்தை அறுவகையாக வகுத்துள்ளான், அவை யாவன கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பனவாகும். மார்கழியும், தையும் முன்பனிக்காலம், மாசியும் பங்குனியும் பின்பனிக்காலம். குளிரிலே குளிர்ந்த நீரில் மூழ்குவது முதலில் நடுக்கம் தருமென்னும் இறுதியில் எல்லையற்ற இன்பத்தைத் தருகிறது. இது எமபட்டுணர்வு அனுபவம். குளிக்கும்பொழுது குளிரின் நடுக்கம் முதலில் ஏற்படினும் குளித்து முடிந்தவுடன் உடம்பில் இயற்கையான சூடு பிறக்கிறது. அதுமட்டுமல்ல இயற்கையை எதிர்த்து இவ்விதம் நீராடி நோன்பு நோற்கும் எனற உள்ள நிறைவும் ஏற்படுகிறது. இறையருளை இதயத்தில் ஏற்றி அவன் இன்னருளைப் பெற்று பேரின்ப

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## மக்களுடைய விடமும்

சைவப்புலவர் க. சிற்றம்பலம் அவர்கள் இந்துசாதனம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆட்சிக் குழு உறுப்பினர்களில் ஒருவர், தலைசிறந்த பாம்புக்கடி மருத்துவ நிபுணருமானவர். நடந்து முடிந்த நாலாவது தமிழாராய்ச்சி மாநாட்டின் அறிவியல் அரங்கில் (8—1—74) இவரின் இக்கட்டுரை அரங்கேற்றப்பட்டது இக்கட்டுரை நான்கு வாரங்களுக்கு இடம் பெறும்.
—ஆசிரியர்

பாம்புக்கடி வைத்தியர்
சைவப்புலவர்
க. சிற்றம்பலம்

விஷ ஜெந்துக்கள் என்றசொல்லும்பொழுது பாம்புகள், பூச்சிகள் மிருகங்கள் என்பன மனிதனுக்கு விஷத்தைச் செலுத்தி, விசித்திரமான வகையில் மனித உடலில் விஷ செறிவையுண்டுபண்ணி, மரணத்தை விளைவிக்கின்றன. இப்படியான விஷ ஜெந்துக்களிலிருந்து மக்கள் தப்பிவாழ்ந்தாலும், காத்திரப பிரகாரமாகவும், சந்தர்ப்பச் சூழ்நிலையாலும் அவற்றால் தாக்கப் படுகின்றார்கள். அப்படித் தாக்கப்பட்ட பொழுது பலர் பல விதமான சுதேச வைத்திய முறைகளைக் கையாண்டு, விஷத்தாக்கிலிருந்து தப்பி உயிர் வாழும் வகையும் உண்டென்பதைச் சித்த வைத்திய முறைகள் அறை கூவுகின்றன ஆகவே இவற்றைப்பற்றித் தனித்தனியாக ஆராயலாம்.

**பாம்புகள்!**

பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பது பழமொழி. பாம்புகளில் பல விஷயில்லாதவையாக இருந்தாலும் மக்கள் கொடிய விஷமுடைய சிலபாம்புகளால் தாக்கப்பட்டு, விஷவேதனையால் மரணத்தைத் தழுவுவதன் கொடுமையால் மக்கள் எல்லாப் பாம்புகளையும் வெறுக்கின்றார்கள். ஆனால் பாம்புகள் மக்களை ஏன் தாக்குகின்றன? எப்படித் தாக்குகின்றன? பாம்பாற்றுக்கப்பட்டவன் எப்படித் தப்பலாம? விஷமென்றால் என்ன? இவைகளைப் பற்றிச் சிறிது யாவரும் அறிந்திருத்தல் நன்றாகும். இன்றைய விஞ்ஞான உலகத்தில் மனிதனுக்கு வரும்புதுப் புது வியாதிகளுக்குப் பல புதுப்புது மருந்துவகைகளைக் கண்டறிந்துள்ளார்கள். ஆனால் விஷஜெந்துக்களால் தாக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற விஞ்ஞான வளர்ச்சி போதியவரை உதவவில்லை என்றுதான் காணக்கிடக்கின்றது. என்றாலும தற்காலத்தில் பாம்புக்கடிக்கு மாத்திரம் (Antiserum) என்னும் மருந்து ஊசி மூலம் செலுத்தப்படுகின்றது. இது

வளர்ச்சி 4-ஆம் பக்கம்

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

பிரமாதீசஹூ மார்கழி மீ உ௭-உ வெள்ளிக்கிழமை [1974]

## தை தருமா தைரியம்?

ஆதவன் உதித்தனன் தைத் திங்களை அறிமுகஞ் செய்து. சூரியன்முன் பனி போலத் துயரும், துன்பமும் விலகும் என்பது, வழிபிறக்கும் என்று வழிபார்த்திருக்கும் மக்களின் இயல்பான எண்ணம வைகறைத் துயிலெழுந்து தெய்வத்தைத் தொழும் பொழுது கதிர்பரப்பி எழுகின்ற கதிரவனைக் கை எடுத்து வணக்கம் செய்யும் வழக்கம் பெரியதோர் உண்மையை அடிப்படையாகக் கொண்டது. கண்கண்ட தெய்வம் என்று இயற்கையின் எழில்விளக்கும் இரவியைக் கிழக்கு நோக்கி நின்று தொழுகின்றோம்

மன இருளை நீக்கி வினை மயக்கத்தைப் போக்கி மெய்வழியைக் காட்டி உய்வை உணர்த்துவதற்குரிய ஒளியை வேண்டுகின்றோம். எனவே தைத் திருநாள் உத்தமமான நெறியை உலகுக் காட்டுகின்ற பெருநாளாகின்றது. மக்கள் இறைவனை வழிபடும் வகையிலே ஞாயிறு போற்றுவர் அன்பின் மேலிட்டினால் 'சருக்கரை கலந்த பாலிற் பருப்புடனே நாளிகேரப் பழச்செழுந் துருவல் சேர்த்து "அமுது" சமைப்பார்கள். ஆலயஞ்கொழுது சாலவுஞ் சிறந்த விருந்தோம்பற் பணியில் நிற்பார்கள். பொங்கலின் பொலிவு வாழ்வின் மலர்ச்சியைக் காட்டும் என்று மங்கல விழா அமைப்பார்கள்.

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி"

என்றுங்கு உழவர் வாரிவளம் வேண்டித் தொழுவர், ஏரின் சிறப்பிலேயே இவ்வுலக வாழ்வின் சீரிருக்கின்றதென்பதை இப்பொழுது மக்கள் உணர்ந்துவிட்டனர். ஆகையால் யாவரும் உழவர்களாகும் இவ்வேளையில் இறைவனருளின்றிப் பொருள்வளம் அமையாது. திருவருளைத் தேடுவதற்கு இறைவழிபாடே இன்றியமையாதது. ஆகவே தைப்பொங்கல் அத்தியாவசியமான வழிபாடாகும்.

எழுந்த பரிதியின் இன்னொளியின் வழி எங்கள் இதயங்களில் உண்மைநெறி உணர்ச்சி எழுந்துவிட்டால் வேறென் வேண்டுவது. உள்ளும் புறம்பும் புனிதமாக உலைத்துலாவ மெய்யொளியை நாடி ஈசனை இடைவிடாது தியானித்து பொய்வழிப்போகாதுய்யும் நெறியைக் காணத் தை ஞாயிறு போற்றுவம்.

## தறுகணுண்மை தலை விரித்தாடியதா ?

வியாழக்கிழமை யாழ். முற்றவெளியில் இயமன் என்றுமில்லாதவாறு நடமாடியதை எண்ணும்பொழுதெல்லாம் நெஞ்சம் குலைகின்றது. தஞ்சம புகுந்து ஒதுக்கிடம் தேடியவர்கள் ஒன்றுமறியாத பொது மக்கள் நம்மிடமே தஞ்சம புகுந்தனர் என்றால் இந்தக் கொடூர அட்டூழியத்துக்கு யார் காரணம என்று காம் கேட்ககாதிருக்க முடியாது. கண்ணீர்ப் புகையும் குண்டர் தடியடிப் பிரயோகமும் அவ்விடத்தில் இடம்பெற வேண்டியதற்குப் பாதுகாவலரும், மாகாண அதிபதியும் விளக்கம் கொடுக்க வேண்டியவர்களாகின்றனர்.

மின் இயக்கத்தின் பிழையினுலே எழுபேர் உயிர் நீத்தனர் என்றால் யார் இதற்குப் பொறுப்பு! பொது மக்கள் கூடிநிற்கும் இடங்களிலே அவர்களுக்கு உதவி செய்வதற்கன்றோ பாதுகாவலர் படையிருக்கின்றது, இன்னோரன்ன பலப்பல கருத்துக்களையெல்லாம் நன்காராய்ந்து நடுநிலைமையாக அறிக்கை செய்வதற்கு அரசினர் ஒருகணமும தாழ்த்தாது பொது விசாரணைக் குழுவை நியமித்தல் வேண்டுமென்று நியாயம், நீதி நெறியை முன் வைத்துப் பிரதமரைக் கேட்கின்றோம்.

பெண்மணிகளின் கண்ணீர்ப் பெருக்கு உண்மையை வெளிப்படுத்துவதற்குரிய முறையீடானது.

ஈழத்துச் சிதம்பரத்தில்

## மணிவாசகர் விழா

பத்தொன்பதாண்டுகள் தொடர்ந்து உத்தமசைவப் பணியாற்றிவரும் மணிவாசகர் சபை சைவப் பொது மக்கள் தேவசபைத் தேர்லுக்கு வாக்குரிமைத் தத்துவத்தைப் பெற்றுவிட்டதென்று விழாவை ஆரம்பித்துவைத்த சைவபரிபாலன சபைத் தலைவர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் சென்ற சனிக்கிழமை நடந்த வைபவத்திற் குறிப்டனர்.

பௌராணிக வித்தகர் பிரம்மஸ்ரீ வ. குகசர்மா அவர்கள "திருக்கோத்தும்பி" என்ற பொருள பற்றி தத்துவக்கருத்துக்களை எடுத்து விளக்கி உரையாற்றினர்.

சிவத்தமிழ்ச் செல்வி திருவாசகக் கொண்டல் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் 'அருட்பத்து' என்ற தலைப்பில இறைவன் மணிவாசகருக்கு அருளிய திறமும அருளவேண்டிய திறமும் விரிவுற உரைக்கும் பதிகமாதலின் அதற்கு அருட்பத்து என்று கூறப்பட்டதென்று ஈசனை அவ்வடியார் ஆதரித்தழைததல் அது எற்றுக்கென்று வினவிடையாக விளக்கவேண்டுமென்று முதல் ஒன்பது பாட்டுக்களிலும் பத்தாவது பாட்டில் [illegible] கயிலைபுகுநெறி இதுகாண போதராய் என்று அருள வாயே எனக்கூறிச் சமாதானஞ் செய்தார் என்றும் ஆராய்ச்சி விளக்கம கூறித் திருவாசகப் பெருமையை வியந்து சொற்பெருக்காற்றினர்.

மணிவாசக சபைத் தலைவர் வழக்கறிஞர் திரு

### திருவாசக விழா

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினருடைய பெருமுயற்சியினால் இவ்வாண்டு திருவெம்பாவைக் காலத்தில் புண்ணிய க்ஷேத்திரமாகிய திருக்கேதீச்சரத்தில திருவாசகவிழா திருவாசக மடத்தில் சிறப்பாக நடைபெற்றது சிவாகமா ஞானபாநு சிவ ஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள தலைமையில் சிவபூசை மகாநாடு நடந்தது திருவாதவூரடிகள் புராணபடனம் திருவெம்பாவை ஓதுதலும் சிறப்பாக நடந்தன திருவாசகத்தின் பெருமையை விளக்கும முகமாக பல அறிஞாகள் சிறப்புச் சொற்பொழிறாற்றினாகள

சைவப்புலவர் மணி திரு த. குமாரசுவாமிபிள்ளை அவர்கள தலைமையில சிவதமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு 'சிவ சமயச் செல்வி' என்ற பட்டம் அளிக்கப்பட்டது அம்மையாருக்கு ஒருதங்கப்பதக்கமும் அணியப்பட்டது பாராட்டுரைகளும வழங்கப்பட்டன. இந் நிகழ்ச்சிகளை யெல்லாம் திறம்பட நிருவகித்துவரும் தவச்செலவர் சிரு ச. சரவணமுத்துச் சாமியார் அவர்களுடைய தொண்டு பாராட்டறகுரியது.

செ. இராசையா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்.

இரண்டாம் நாள் மணிவாசக சபை உப தலைவர் தலைமையில் வித்துவான் [illegible] "புலியூரானைப் பேசாத நாள்" என்ற பொருள் பற்றியும், "முன்னைப் பழம் பொருள்" பற்றி விஷயாமக அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களுப சொற்பெருக்காற்றினர்.

மூன்றும் நாள் சபைத் தலைவர் திரு செ இராசையா அவர்கள் விழாத் தொடக்கிவைகக, ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத் தம்பிரான சுவாமிகள் "மண் சுமந்த மாதேவன்" என்ற பொருள் கொண்டு சங்கீத கதாகாலாட்சேபம் நிகழ்த்தினர்.

திருமதி இராஜராஜேஸ்வரி பொன்னம்பலம் பண்ணிசை நிகழ்ச்சி நடாத்தனர்.

ஒவ்வொருநாளும் பெருந்தொகை வழிபாட்டன்பர்கள் நிறைந்த சபை நிகழ்ச்சிகளை அனுபவித்தனர்.

### ஆதிரைத்திருவிழா

திருவெம்பாவை பஜனைப்பூர்த்தி விழாவும் மணிவாசகபபெருமான திருவீதி உலா வைபவமும் யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராசேஸ்வரி அம்பாள ஆலயத்தில 9-1-74 மாலை வெகு சிறப்பாக நிறைவுபெற்றன, யா. சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர் தலைமையில ஏராளமான சிறுவர் சிறுமிகள வீதி பஜனையில கலந்து கொண்டனர். ந. நி.

## ஏழை அழுத கண்ணீர்…!

ஏந்திழையார்க் கின்னல் இழைத்தவரை இவ்வுலகில்
மாந்தரென யாரே மதித்திடுவர் — சாந்தனையும்
ஏழை அழுத கண்ணீர் ஈர்க்கும்கூர் வாளொக்கும்
கோழை யருக்கென் குணம். - "இறை - ஒளி"

எமது சக்திக்கு அப்பாற்பட்ட தவிர்க்க முடியாத காரணங்களினாலும், இடையே வந்தமைந்த விடுமுறை நாட்களினாலும் இவ்விதழ் காலதாமதமாக வருகின்றது. வாசகர்கள் எம்மை மன்னிப்பார்களாக.

அதிபர்

### கவர்ந்தது தமிழ்ப் பண்பு காரிகையாரை

நான்காவது அ. உ. தமிழாராய்ச்சி மாநாட்டுக்குச் சமுகமளித்த வெளிநாட்டுப் பிரமுகர்களுள் கனடாவைச் சேர்ந்த திருமதி. வ்ருந்தா. E. F. பெக் என்னும் அம்மையாரும ஒருவராவர். அவர் தமிழ்ப் பண்பாட்டில் மிகுந்த ஆர்வமுடையவர். தமிழ்ப்பெண்களைப் போன்று சேலை உடுதது நெற்றியல் திலகமிட்டுத் தூய சைவ மங்கையர்போற் காணப்படுகின்றார், அவர் தமிழில் உரையாற்றினா.

தென்னிந்தியாவில் 23 மாதங்கள் கொங்கு நாட்டிலுள்ள ஒரு குடிசையில வாழ்ந்து தமிழமக்களுடன் கலந்து தமிழ் பண்பாட்டைக் கற்றுக் கொண்டனர்.

நமதுநாட்டில் இக்காலம பெண்கள் தமிழப பண்பாட்டை மறக்கிறகாலத்தில் அம்மையார் அவர்களுக்கு தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை எடுத்துக் காட்டி வாழுகின்றார்' என தமிழாராய்ச்சி மாநாட்டுத் தலைவர் 10-1-74 வியாழக்கிழமைநடந்த மாநாட்டுக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

அம்மையார் இன்னும் சில தினங்கள் உரும்பிராயிலே தங்கி தமிழர்களுடைய பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொள்ளத் தீர்மானித்திருப்பதாகவும் அறிகிறோம,

### தமிழாராய்ச்சி மாநாட்டில் சித்த வைத்தியக் கண் காட்சி

சித்த வைத்தியப் பிரிவு தமிழ் ஆராய்சசி மாநாட்டில மக்கள உள்ளத்தைக் கவர்ந்ததென்பதை பார்வையாளர் குறிப்புக்கள் மூலம், பல பெரியார்கள் பாராட்டுத [illegible]. வருங்காலத்தில சித்த வைத்திய வளர்ச்சிக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டென்பதை, மக்கள் உணர்ந்துவிட்டனர்.

சுதேச உணர்ச்சி மக்களிடம் ஏற்படச் சுதேச வைத்தியக் கலை வளாச்சிநலல வகைசெய்கின்றது. இப்பணியிற் பங்கு கொண்ட சகல அன்பர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளுகின்றனர் அ. இ சி. வைத்தியசங்க நிர்வாகக் குழுவினர்.

### பொன். அருணசலம் தினம்.

ஈழநாட்டின் அருந்தவப் புதல்வர்களுளொருவரான சேர் பொன. அருணாசலம் அவர்கள் தினம் 9-1-74 இல் நிகழ்ந்தது. அப்பெரியார் அக்காலம அரச உயர் சேவையில் பதிவாளர் நாயகமாகத் திறம்படக் கடமையாற்றினார். ஈழநாட்டுக்கு ஒரு சர்வகலசாலை நிறுவவேண்டுமென முதல் முதல் 1906ம் ஆண்டில குரலெழுப்பியவர் அவரே அவர் தமிழ ஆங்கிலம் சமஸ்கிருதம், இலற்றின, கிறீக்முதலிய பாஷைகளில் பாண்டித்தியம் படைத்தவர் "கதிர்காம மகிமை" யைபபற்றி ஆங்கிலத்தில் ஒரு சிறந்த நூல் வெளியிட்டனர் திருமுருகாற்றுப்படை முதலிய சங்கநூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தனர். இலங்கைத் தேசிய சபையை நிறுவி சுதந்திரததுக்கு வித்திட்டவரும் அவரே அவர் நமது நாட்டுக்கும் இந்துசமயத்துக்கும் தேசிய ஒற்றுமைக்கும் ஆற்றிய தொண்டு அளப்பரிது.

### மாத ஏடு

ஆத்மஜோதி நிலையத்தாரால் வெளியிடப்பட்ட 1974ம் ஆண்டு மாத ஏடு கிடைக்கப்பெற்றோம. அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம.

# நவீன சித்தர் யூரி. ஜெல்ஸர்

"Uri gets Britain in a Twist" என்பது ஒரு சனிக்கிழமை வெளிவந்த ஆங்கில நாளிதழின் தலைப்புச்செய்தி.

முதல் நாள் இரவு தான் பி. பி. சி தொலைக் காட்சியில் யூரி ஜெல்சன் என்ற 27 வயது யூத இளைஞர் பெரும்விஞ்ஞானிகளின் விதிகளையும் அறிவியற் கருத்து கோள்களையும் தன்மனோ சக்தியால் தூள் தூளாக்கியிருந்தார்

முட் கரண்டிகள் அவர் கைப்பட்டதும் வளைந்தும் நெளிந்தும் போயின, ஓடிக்கொண்டிருந்த கடிகாரங்கள் நின்றன. இந்தச் சாதனைகளை நேரிலும் தொலைக் காட்சியிலும் ஆயிரமாயிரம் மக்கள் பார்த்தனர்.

தொலைக் காட்சி நிலையத்திலிருந்த பல அறிஞர்கள் அதிர்ந்து போனார்கள். இதைத் தவிர மூடிக்கிடந்த ஒரு உறையினுள் இருந்த வரைபடத்தை அப்படியே அவர் வரைந்து காட்டினார்.

அமெரிக்காவில் பல சாவிகளை வளைத்துக் காட்டினார் அவரே, அவரைப் புகைப்படம் எடுத்துக்கொண்டார் இதில் என்ன விசேஷமென்றால் இவர் பிடித்த இந்தப் படத்தை எடுத்த காமிராவின் ஒளி புகும் வழியான "லென்ஸ்" பகுதி அழுந்த மூடப்பட்டிருந்தது.

இவருடைய செயல் முறைகள் அனைத்தையும் நுல்லியமாகப் படமெடுத்து ஆய்ந்த கலிபோர்னியா ஸ்டான்போர்ட் ஆய்வுக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இவரது செயமுறைகளை அறிவியலின் எந்தப் பகுதியுடன் சேர்ப்பது என்று புரியாமல் விழிக்கின்றார்களாம்.

"நாஸா"வைச் சேர்ந்த மின் கணக்கி கூட இவர் முன்னிலையில் இயங்க மறுத்துவிட்டதென்றால் பாருங்களேன்.

பூமிக்கு வெளியே உள்ள கிரகங்களிலிருந்து தனக்கு இந்தச்சகதி வந்திருக்கக்கூடும் என்கிறார் யூரி ஜெல்ஸர்.

நம்நாட்டுச் சித்தர்களது வியத்தகு செயல்களை அவநம்பிக்கையுடன் நோக்கி வந்த நாம் இதற்கு என்ன பதில் சொல்லப் போகின்றோம்........?

ஆதாரம்: —"லண்டன் முரசு'

## கருத்தரங்கில்

சித்தவைத்தியக் குழு ஆராய்ச்சி

நான்காவது தமிழாராய்ச்சி மகாநாட்டில் சித்த வைத்தியப் பிரிவுக்குத் தனியான பகுதியில் தங்கள் ஒவ்வொருவரும் தம் சிந்தனை கலந்த ஆராய்ச்சிகளைத் திறம்படச் செய்தனர். "மகளும் விடமும்' என்னும் ஆராய்ச்சி மக்களுக்கு நல்ல பாதுகாப்பான ஒரு ஆராய்ச்சியென பொதுமக்கள் பெருமைப்பட்டார்கள். இனினும் பலர் இதுபற்றி ஆராயும்படி விஷ வைத்திய நிபுணர் திரு. க. சிற்றம்பலத்தை பல அன்பர்கள் கடிதமூலம் கேட்டுள்ளதாக அறியக்கிடக்கிறது

## சைவசமய அறிவுப் பரீட்சை 1974

சாங்கையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் வழமை போல் சைவசமய அபிவிருத்திப் பரீட்சையை 3-2-74 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பித்து நடத்தும் பரீட்சை விண்ணப்பங்கள் 27-1-74 வரை ஏற்றுக் கொள்ளப்படும் பரீட்சை விபரங்கள் :- சமய அறிவுக்கட்டுரை சமய அறிவுப் பரீட்சை திருமுறை மனனப்பரீட்சை [பிரவேசப் பணம் 50 சதம் பரிசில் வழங்கல் 20-2-74 மகா சிவராத்திரியன்று நடைபெறும்.]

### பஞ்சமுகார்ச்சனை

14-1-74 திங்கட்கிழமையன்று சாங்கையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோயிலில் காலை 5 மணி தொடக்கம் இரவு 7 மணிவரையும் விடேச பூசை விசேடாபிஷேகாராதனை, பொங்கல் சுவாமி வீதிவலம் வருதல், மாலைப் பூசை பஞ்சமுகார்ச்சனை நடைபெறும்.

### வாழும் முறை

மறந்தும்பிறனகேடு சூழற்கசூழின் அறஞ்சூழும் சூழ்ந்தவனகேடு.

ஒருவன் மறந்தும் பிறருக்குத் தீங்கு செய்தல் கூடாது. அவ்வாறு தீங்கிழைப்பின் இறுதியில் அவனுக்கேதீக்குவிளையும்.

## சூதாட்டம் தீதாட்டம்

சூதும் வாதும் வேதனை செய்யும். பிறர் பொருளை முறை தவறிக் கைப் பற்றுவது சூதாட்டம். அப்படிச் சம்பாதித்த செல்வம் நிலைத்திராது. பாவத்தையும் பாதரசத்தையும் ஜீரணம் பண்ணமுடியாது. சூதாட்டம் பொல்லாதது என்பது தொன்று தொட்டு நிரூபிக்கப்பட்டு வந்திருக்கிறது.

பழங்காலத்திலேயேபாண்டவர்களும் கௌரவர்களும் பகடை என்றசூதாட்டம் விளையாடி நாட்டைப் பாழ்படுத்தினார்கள். இக்காலத்தில் நம்மவர்கள் பரிசுச் சீட்டு என்ற சூதாட்டத்தையும் குதிரைப் பந்தயம் என்ற சூதாட்டத்தையும் நடத்தி வருகிறார்கள் இவைகளின் விளைவு கேடு. நல்லோர் இத் தீங்குகளினின்று விலகியிருப்பார்களாக. பொது நலனுக்காக வென்றாலும் இவைகளில் ஈடுபடலாகாது. இவைகளில் கருத்துச் செல்லாதிருக்குமளவு நலத்தை வளர்த்தவர்களாவோம்.

ஆதாரம். தர்மசககரம்.
உதவியவர் : மில்க் வைற்.

### திருத்தம்

14-12-1973 இல் வெளிவந்த இந்து சாதனத்தில் விளமபரம் செய்யபபட்ட விற்பனவு விளம்பரம் இல M. B. 11543 இன் உடைய விற்பனவுத் திகதி 19-1-1974 என்று இருந்தது தற்பொது அரசாங்கத்தால் சனிக்கிழமைகள் விடுமுறை நாள் ஆக்கபபட்டமையால் விற்பனவுத் திகதி 11-2-74 திங்கட்கிழமை பின் போடப்பட்டுள்ளது என்பதை கொமிசனர் அறிவிக்கின்றார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சின்னக்குட்டி ஆறுமுகசாமி சுளிபுரம் —வழக்காளி
இல: M B 11400 எதிராக
(1) சின்னத்தம்பி செல்லையாவும் பெண் 2) தங்கம்மாவும்
(3) செல்லையா புஸ்பராசாவும் பெண (4) தனலெட்சுமியும்
எல்லோரும் பண்டத்தரிப்பு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11400-ம இலக்க வழக்கில் எனககுக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்கடுட துண்டுக் காணி 1974-ம ஆு (30-1-74) தை மாதம் 30-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 13920/- 23-1-70 தொடககம 20-7-70 வரைக்கும் ரூபாய் 12000 க்கு 12 வீதவட்டியும் அதன்பின் முழுததொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 587-14 சதம் இத்தொகையில் ரூபா 3425/ கழிதது மிகுதி முழுவதும்.

### அதன விபரம்

1 வடயாகணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்பு கோவிறபற்று பண்டததரிபபில உள்ள ஆலங்குளாய் என்னும் 8½ நிலப்பரப்புமு அதுள் அடங்கிய வீடும் கிணறும் வான்பயிர் வளர் பயிர்களும் இதற்கு எல்லைகள் கிழக்கு ஒழுங்கை வடக்கு இராமு கந்தையாவும் பங்காளரினதும கந்தையா பெண சிவக்கொழுந்துவினதும் மேற்கு ஒழுங்கையும இராமு ஐயனினதும பங்களரினதும ஆதனம தெற்கு வேலு ஆறுமுகமும் பெண் அன்னமாவினதும் ஆதனம் பதி இல E 377/225

2. மேற்காட்டியபடி பண்டத்தரிபபில உள்ள பயத்தம் புலம் அல்லது பயததம்புலோ எனனும 6 நிலப்பரபபுக் காணியும அதுள் அடங்கிய கணறும் வானபயிர் வளர் பயிர்களும் இதற்கு எலலைகள கிழககு ஒழுங்கை வடக்கு இராமு கந்தையா பெண் செல்லாச்சியின் ஆதனம மேற்கு மண்ணி சினனபபுவின உருததாளரினது ஆதனம் தெறகு ஆழ்வான் பெண அனனமாவினதும இராமன் மாணிகனினதும் ஆதனம. பதிவு இல E402/84

தோல்புரம் சோ நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும மதிபபாளரும

18-11-73

303 11—1

## நாவலர் பிள்ளைத்தமிழ்

— "பழைய பாணி" —

(முன் வளர்ச்சி — 31)

ஆறுவது : - வாரானைப் பருவம்.

ஆர்த்த சபைநூற் றொருவரெனும்
ஔவை பாவின் நூறுறழ்ந்த
அவ்வா யிரத்தின் மேலுறழும்
அளவார் பதினா யிரத்தடைவின்
வார்த்தை பதினா யிரத்தொருவர்
வழக்கு மிழுக்கிற் றிங்கிவர்தாம்
வையம் முழுதுக் கொருவரென
வந்த வரவே வருகநலஞ்
சேர்த்த தலமோங் குயர்நல்லைச்
செல்வா வருக செம்மையுளார்
சென்று காணுந் தகவுடைநற்
சீரோய் வருக சேவலுயர்
தீர்த்த னறுமா முகன் பெயர்கொள்
செம்மல் வருக வருகவே
தெய்வம் மடிதற் றெழக்குடிசெய்
திறலோய் வருக வருகவே. (1)

## திருவெம்பாவை

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

துய்க்க உரியகாலமாகவும் இது விளங்குகிறது.

தை நீராடலும் மார்கழி நீராடலும்:-

எம்முன்னோர் இந்நீராடலை தை நீராடல் என்றுவழங்கினர். சங்க இலக்கியங்களான பரிபடல் கற்றினை, குறுந்தொகை, கலித்தொகை முதலிய நூல்கள் இக்காத்தினை வலியுறுத்துகின்றன பரிபாடல் என்ற நூலில் "அம்பா ஆடல்" என்ற சொற்றொடர் கையாளப்பட்டுள்ளது. மணமாகாத மங்கைகள் நல்லகணவரை அடையவேண்டி நோற்கும் நோன்பாக இதுவிளாங்கியது. அம்பா ஆடல் என்பதற்கு "தாயுடன் ஆடுதல்" என்று பொருள் கூறுவர் தமிழ் அறிஞர் "அம்பாவை' என்பதே "அம்பா' என்ற சொல்லின் விரிவாகத் தோன்றுகிறது. பாவை போன்ற பெண் பிள்ளையின் வடிவை தாய்க்கடவுளின் வடிவாக உருவகித்து வழிபடும் மரபு சங்காலப் பெண்களிடம் நிலவியதென்று தமிழ்ச்சான்றோர் சாற்றுகின்றனர். தொடக்கத்தில் பாவை நோன்பின் நோக்கம் நல்ல கணவனை அடைய நோற்கும் நோன்பாக இருந்ததெனினும் காலப்போகில் நாட்டின் வளத்திற்கான மழையை நாடி நிற்கும் நோன்பாகவும் விரிவு பெற்றது.

மழையை வேண்டி நோன்பு

கற்பே மழையைத் தரும் என்று நம்பிய முன்னையோர் இக் கன்னியர் நோன்பு மழையை வருவிக்கவும் துணைபுரியும் என்று நம்பினர். கற்புடையபெண்டிர்மழையைப் பெய்யெனச் சொன்னால் பெய்யும் எனும் கருத்தின் "பெய்யெனப் பெய்யும், மழை" என்ற திருக்குறட் சொற்றொடரும் வலியுறுத்துகிறது.

ஆண்டாளும் ஆளுடைய அடிகளும் ஏற்படுத்திய மாற்றங்கள்

தைத்திங்களில் காமனை வழிபட்ட தைநீராடலும் மார்கழியில் மழையை வேண்டி வழிபட்ட அம்பா ஆடலாகிய மார்கழிநீராடலும் காலப்போக்கில் 8 ஆம் நூற்றுண்டில் சூடிக்கொடுத்த சுடர்க் கொடியாகிய ஆண்டாள் கையிலும் 9 ஆம் நூற்றுண்டில் தேன்கலந்த வாசகம்தந்த மணிவாசகர் கையிலும் மிகத்தெய்விக நிலைக்கு உயர்த்தப்பட்டு மார்கழி நீராடலாக மலர்ந்துள்ளது.

ஆண்டாள் பின்வரும் தன் அருட்பாடலில்;-

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னளில்
நீராடப் போதுவீர் போமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கர்வேல கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கன்னியசோதை இளஞ்சிங்கம்
காரமேனிச் செங்கன் கதிர்மதியம்போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்"

என்று மதிநிறைந்த மார்கழித்திங்களில் நீராடி நோன்பு நோற்பதைத் அவர்தம் தொடக்கப்படலில் எடுத்துக் காட்ட நம் மணிவாசகப் பெருந்தகையோ

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எலலா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம பூங்கழல்கள்
போற்றி எல்லாஉயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றிமால நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்."

என்று தன் திருவெம்பாவையை இறுதிப்பாடலாகிய 20 ஆம் பாடலோடு இனிது முடிக்கிறார். (வளரும்)

## அறிஞர்களுக்கு வரவேற்பு

10-1-74 வியாழக்கிழமை பி. ப. 4 மணியளவில் நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு வருகை தந்துள்ளவர்களுக்கு வேலணை முருகன் கோயிலில் வரவேற்பளிக்கப்பட்டது. — —

## ஆராய்ச்சி மாநாடு

(1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

“தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் — பெய்யெனப்பெய்யும் மழை” “உழு துண்டு வாழ்வாரே வாழ்வார் ...” “யாழினிது குழலினிது....” என்ற சொற்றொடர்களுடன் தொடங்கும் பொய்யாமொழிகளைச் செய்யுட்செம்மையுடன் பெய்தமை இம்மொழியை எய்யாமற் காப்பாய்என்று கடவுள் வணக்கம் விளம்பியது பேரன்பிருந்தது.

## சிங்கள அன்பரிடம் நம்மொழி எழுச்சி

பதின்மூன்றாண்டுகளுக்கு முன் பொதுநூற் சிறப்புள்ள திருக்குறளைச் ஆரிய மொழியிற் பெயர்த்திருக்கும் இப் பண்டிதர் சைவக் கருவூலமாய பெரிய புராணத்தையும் தம்மொழியில் ஆக்கும் நோக்கங் கொண்டிருக்கின்றனர் என்றால் மொழி வழி எழுச்சி என்னே!

## அயல்மொழியாளரும் எம் சுய மொழியாண்டனர்!

தன்மொழி யன்புள்ளவர்கள் பிறன்மொழி பேசுவதும் அம்முறையில் அக மகிழ்வதும் மொழிப் பண்பாகும். இவ்வகையிலே சிங்கள மொழிச் செந்நாப் புலவர் ஒருவர் எங்கள் மொழியிலே மங்கல நடையிற் சொற்பெருக் காற்றுவது விற்பன்னம் மட்டுமன்று. மொழிநெறி எழுந்த அபிமானமும் ஆகும். இப் புகழ் படைத்தவர் யாரெனில் இளைப்பாறிய ஆசிரியர் திரு. D. D, நாணயக்கார அவர்கள். இப் பெரியார் ஒப்பற்ற நாவலர்பெருமானின் சைவ வினுவிடையைச் சிங்கள மொழியிற் பெயர்த்த புகழ் படைத்தவர். கந்தபுராணத்தையும் தமிழ் மொழியில் உந்தப்பெற்ற சிந்தனையாற் சிங்கள மொழியிற் செய்வதற்குச் சிந்தித்துள்ளார். சுவைத்தாலன்றோ தமிழின் இனிமை தோன்றும்.

---

## தமிழ் அழகு தவழ ...

1ம் பக்கத்து வளர்ச்சி

மொழிசசெல்வி ஔவைப் பிராட்டி. யாவரும் போற்றும் நாவலர் நற்றகையார் தமிழ்த்தவ விபுலானந்த சுவாமி வரலாற்று வல்லுநர் வண. சுவாமி ஞானப்பிரகாசர் வள்ளல். சேர். பொன். இராமநாதப்பெரியார் ஆகியவர்களின் உருவங்கள் தாங்கிய ஊர்திகள் தமிழ்மொழி வரலாற்றின் அமிழ்தனைய அறிஞர்களை — அவர்களது வியத்தகு பண்பாட்டு எழிற் சிறப்புகளை மீண்டும் அறிமுகப் படுத்தியவண்ணம் ஊர்ந்து சென்றன. கப்பல் ஓட்டிய தமிழன் கதை கட்டுக்கதை அல்ல என்று கண்கூடாகக் காட்டத் திரைகடல் கடந்து பாரம்பரை வரலாற்றையுடைய அன்னபூரணி என்னும் தோணியின் அலங்காரத் தோற்றத்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. M. B. 11759

1. சின்னத்துரை தர்மலிங்கம் இருபாலை 2. சின்னத்துரை தியாகலிங்கம் நீர்வேலி — வழக்காளிகள்

எதிராக

1. செல்லப்பா சுப்பிரமணியம் 2. பெண் தங்கரட்டினம் இணுவில் தெற்கு சுண்ணாகம் — எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் M B 11759ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணி 1974ம் ஆண்டு மாசி மாதம் 9ம் திகதி (14-2-74) வியாழக்கிழமை மு. ப 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்ப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 10875/- பின் 10-6-70 தொடக்கம் 3-10-70 வரை ரூபா 9000/- 10 வீதவட்டியும் பின் முழுத்தொகைக்கும் இறுபடும் வரை 5 வீதவட்டியும கோட்டுச் செலவு ரூபா 561-37 சதம் இதில் முதல் தொகையால் ரூபா 8450/- கோட்டுச் செலவால் ரூபா 200 கொடுக்கப்பட்டது.

### ஆதன விபரம்

1. வடமாகணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு இணுவில் உடுவில் கோவிற்பற்று கலலிடிப்பு ப. நி. 4 ம வீடும் கிணறும் பயிர்வகைகளும் இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும ஒழுங்கை மேற்கு கந்தவனம் இராமலிங்கத்துக்கும் பெண் இராசம்மாகுரிய ஆதனம் வடக்கு வேலு கார்த்திகேசுக்குரிய ஆதனம இது அடங்கலும்.

2. மேற்படி மகியப்புலம் எட்டமகியப்புலமும் ப நி 1ம் குழியுர் பனைகளும் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை காமட்சிப்பிள்ளையின உரிமைக்காரருக்குரிய ஆதனம் வடக்கு வேதவனம கனகரத்தினத்துக்கும் பெண் பூமணிக்குரிய ஆதனம மேற்கு சீனியர் சின்னத்துரைக்குமுரிய ஆதனம தெற்கு ஒழுங்கை இது அடங்கலும்.

3 மேற்படி எட்டமகியப்புலம் மகயப்புலமும் ப. நி- 2ம் பனைகளும் இதற்கு எல்லை கிழக்கு கார்த்திகேசு கந்தையாவுக்குமுரிய ஆதனம் மேற்கு பாதை வழிவாய்க்கால தெற்கு கந்தவனம் இராமலிங்கத்துக்கும் பெண் இராசம்மாக்குரிய ஆதனம் இது அடங்கலும்.

“விதானை வளவு” — சி. செ. மாரிமுத்து
சித்தன்கேணி, 26-7-73. — கொம்மிசனரும் விலைமதிப்பாளரும்.

301 11-1

---

## கோட்டு விற்பனவு விளமபரம்

1. N.M. சுமீட் பெண் செய்நம்பூர் 2. M.M சகிட் பெண் ஜமிலா இருவரும் 55 ஜினுரோட் யாழ்பபாணம — வழககாளி

இல:, M.B. 11344 எதிராக

அப்துல் காதமுகமென்ட் இல. 64 முஸ்லிம் கொலிச் ரோட். வண்ணார்பண்ணை மேற்கு — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11344 -ம் இலக வழக்கில் எனக்குக் கிடைத்த கோடடுக் கட்டளைபபடி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1974ம ஆண்டு மாசி மாதம் 13-ம திகதி (13-2-74)புதனகிழமை முறபகல் 10-00மணிககு அந்தக் காணிககுள நின்று பிரசித்த ஏலததில என்னால விற்கப்படும்.

தீர்வைத் தொகை ரூபா 6500 பின் 28-12-69 தொடக்கம 27-7-70 வரை ரூபா 6000/ 10 வீத வட்டியும் பின முழுதொகைகயும இறுபடும்வரை 5 வீத வட்டியும கோடடுச் செலவு ரூபா 340-50 சதம் இதில் தீர்வைததொகையால் ரூபா 5500/ ம செலவு தொகையால் 150/-ம கொடுககப்பட்டது.

### ஆதன விபரம

வடமாகணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக் வண்ணை பண்ணை தென்மேற்கு வண்ணார் பணணை இறை விளாத்திபபுலம ப ல. 12, 2 குளி இது 1 மனுயுவேல உததரவுபெற்ற உலாந்தாவின இலக்கம் 663 பிளான 22-3-53 திகதி இடபபடடு லொற 1 ஆக காட்டப்பட்டது. வீடும வானபயிர் செய்பயிர்களும மற்றும் அதைச சேர்ந்தவைகளும். இதற்கு எலலை கிழககு உசான சாயுககுரிய ஆதனம் வடககு அப்துல ஆசீஸ் பெண ஆசிமாவுக்கும் முஸ்லிம சங்கததுக்குரிய ஆதனம் மேற்கு ரோட்டு தெற்கு மேற்படி பிளானில லொத்த 2ஆககாடடப்பட்ட மரைக்கன சயிபலெவை மென்ட்கனி பெண ஜமிலாக குரிய ஆதனம். இது அடங்கலும.

“விதானை வளவு” — சி. செ. மாரிமுத்து
சித்தங்கேணி. — கொமிஷனர், விலமதிப்பாளர்.
6-12-73. — 302 11-1

---

## மக்களும் விடமும்

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

பெரும்பாலும் நாசம், விரியன், புடையன்முதலிய பாம்புகளின் விஷங்களுக்குத்தான் ஓரளவு வகை செய்கின்றது. மற்றவகை விஷஜெந்துக்களின் கடிக்குப் போதியதாக அமையவில்லை யெனலாம். ஆனால் சித்த வைத்திய முறைகளில் எல்லா விதஜெந்துக்களின் விஷத்தாக்குதலுக்கும் விஷத்தின தன்மைகள் அவை உடலில் செறிந்து செய்யும் மாறறங்கள் சிகிச்சை முறைகள் யாவும் விளக்கமாகவும விரிவாகவும் விளக்கியிருப்பதைச் சித்த மருத்துவர்கள் உணர்வார்கள். இதைவிட பரம்பரையான வைத்திய முறைகளும் தலைமுறை தலைமுறையாகத் தங்கள் சந்ததியினர்க்குள் இரகசியமாக வைத்திருப்பதாலும் அவர்கள் மற்றவர்களுக்கு வெளிப்படுத்தாமல் பதுக்கி வைத்திருந்து வளர்ச்சி குன்றியிருக்தாலும் நல்ல சிகிச்சை முறைகள் அமைந்திருப்பதை அனுபவ வைத்தியர்கள் உணர்வார்கள்.

(வளரும்)

தையும் ஈழத்தின் செல்வமானபனைவருட்சத்தையும் அது தரும் பாங்கானபயன்களையும், கரக ஆட்டம், கம்ப விளையாட்டுப் போன்ற இன்னோரன்ன எழில்மிகு காட்சிகளையும் கண்டு கனிவுகொண்டு களித்தனர் வெள்ளமாய் வீதி எங்கணும் நின்ற மக்கள்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், மைமன் ரோட், அரியாலை [illegible] பொன்னையா மகள் ஜெயதேவி — வழககாளி

வழ. இல. M B 12333 எதிராக

யாழ்ப்பாணம், வீட்டு இல 349, காங்கேசன்துறை வீதி வயித்திலிங்கம் செல்லையா — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12333 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 1974 ம் ஆண்டு மாசி மீ 4-ந் திகதி (4-2 74) திங்கட்கிழமை முறபகல் 10-00 மணி தொடக்கம அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை;- முதல்வட்டி ரூபா 13,583/-ம், 28-2-71 தொடக்கம் 9-11-71 வரைக்கும ரூபாய் 10,000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும இறுக்கும் வரை 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபா 514 சதம் 53 அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 323 சதம் 89 வெலியாத்துச் செலவு ரூபா 111 சதம் 67 இனிமேல் வரும் செலவு ரூபா 78 சதம் 97ம் இதில் கொடுபட்ட தொகைகள் தீர்வைததொகையிலிருந்து ரூபா 6000/- செலவில் ரூபா 300/-ம் கழித்து.

### ஆதன விபரம்

1-ம் காணி:- வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் டிவிஷனும் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை வீடும செய்பயிர் வான்பயிர்களும் ‘பன்றிக காட்டு வழவு’ என்னும் பெயருடைய காணி. பரப்பு நிலம் 4ம் 3/16 இலாச்சமும இதில் சொரியலாக மூன்றில் ஒருபங்கும் (3 1 share) எல்லைகள: கிழககு கிளை ஒழுங்கை வடக்கு ஒழுங்கைமேற்கு: நாகலிங்கம் சுப்பையாவின் ஆதனம் தெற்கு நாகப்பா இராமுப்பிள்ளையினுடையதும் நாகலிங்கம் சுப்பையாவினுடையதும ஆதனம,

2-ம் காணி:- ஷெ வண்ணார்பண்ணை வடமேற்கு இறை ‘முல்லைக்கொட்டடியும், பன்றிக்காட்டு வழவும்’’ என்ற பெயருடைய காணி பர நில. இலாச்சம (?) இரண்டு இதில சொரியலாக மூன்றிலொரு பங்கு (3/1 share) கிழக்கு செல்லப்பா குழந்தைவேலுவினுடையதும நாகலிங்கம் சுப்பையாவினுடையதும் ஆதனம், வடக்கு: ஒழுங்கை மேற்கு; முதலையாகைம பெண் பொன்னம்மாவினுடைய ஆதனம் தெற்கு நாகப்பர் இராமுப்பிள்ளையினுடையதும் மறு பெயர்களுடையதும் ஆதனம.

107, பெரியதெரு. — எ. பி பி. எதிர்மன்னசிங்கம்
யாழ்ப்பாணம், — வெங்தீஸ் கொமிஷனரும். விலைமதிப்பாளரும்
2-1-74 — 299-74

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் [illegible]

(1) காங்கேசன்துறை, சந்தை வீதி, வடிவேலு மாணிக்கம் — வழக்காளி

வழ. இல. M B. 13082 எதிராக

(1) நீக்கிலாஸ் இராயப்பு மைபெண இராக்கினியம்மா ஊறணி, காங்கேசனதுறை — எதிராளி

யாழப்பாணம் டிஸ்திறிக கோட்டின் M B. 13082-ம் இலக்க வழக்கில் எனககுக் கிடைதத கோட்டுககட்டளைப்படி பின்னால விபரிககப்படும துண்டுககாணி 1974 ம ஆணடு மாசி மாதம 9ம் திகதி (9-2-74) சனிககிழமை முறபகல 10 மணிதொடக்கம் அந்தக காணிககுள நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைததொகை: முதல் வட்டி ரூபா 3720/- இதில் ரூபாய் 3000/-க்கும 24 4-74 தொடககம 22-8-72 வரைக ம் 100க்கு 12 வீத வட்டியும அதனபின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும கோட்டுச செலவு ரூபா 419-51 இதில நடைபெற்ற செலவு ரூபா 247-27 நடைபெற வேணடிய செலவு ரூபா 92-92 மேலதிக சமாசமய செலவு ரூபா 79-32 இத்தீர்வைத் தொகையில 22-8-73 ந திகதி கொடுககபபட்ட 1000/- ரூபாயும வழக்குச் செலவில ரூபா 250/- கழித்து மிகுதி கொடுக்க வேணடியிருப்பது.

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக கோவிற்பறறு மயிலிட்டி இறை ‘காக்கையன மணல்’ நி. பர (1) ஒன்றும, குளி (3) மூன்றும், எல்லை கிழக்கு விசேகதி றேமாநதருககும பாங்காளருககுமுரிய ஆதனம, வடக்கு கடல், மேற்கு: கிறிஸ்தோ ஆசைமுத்து கைமபெண் பூரணத்தினுதனம், தெற்கு: உலுககேசுபபிள்ளை ஆசைப்பிள்ளைககும பெண மேரிப்பிள்ளைககுமுரிய ஆதனம. இது அடஙகலும.

(2) ஷெ மயிலிட்டி இறை ‘காக்கையன்மணல்’ நி பர. (1) ஒன்று குளி (3) மூனறும எல்லை கிழககு இதன் மிகுதியாதனம, வடககு கடல மேற்கு இரணடு (2) முழ அகலப் பாதை தெற்கு உலுககேசுப்பிள்ளை ஆசைபபிள்ளைககும பெண மோிப்பிள்ளைக்குமுரிய ஆதனம், இதடங்கலும மேற்கு எல்லையிலிருக்கும் பாதைப் பாவிபபுரித்தும.

24, 1ம் குறுக்குத்தெரு — க. சுப்பிரமணியம்
யாழ்ப்பாணம் — கொமிஷனர், விலமதிப்பாளர்
12-12-73 — 300-74

---

வானமுகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்பபாண சைவபரிபாலன சபையாருககாக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சி யந்திரசாலையில், 11—1—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெறறது.

பிரதம ஆசிரியர் : திரு. நம. சிவப்பிரகாசம்
ஆசிரியர் : திரு. மு. மயில்வாகனம்